தமன பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி கணிப்பிடக்கூடிய போதியளவான இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும், அந்த இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு ஐந்தொகைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பிடியாணைக் கட்டண வருமானம், பேரேட்டின் பிரகாரம் ரூபா 38,548 ஆக இருந்த போதிலும், அது வருமான செலவினக் கணக்கில் ரூபா 26,448 ஆகக் கொண்டுவரப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் ரூபா 12,100 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் பெறுமதி காண்பிக்கப்படாத காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 196,675 ஆக ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 293,319 கூட்டுப்பெறுமதியான 2 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | |
| 150(4) ஆம் பிரிவு | அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாது புறக்கணிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு | |
| (i) விதி 33 | ஆதனவரி செலுத்தாது புறக்கணிக்கின்ற நபர்கள் தொடர்பான பட்டியலொன்று ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போதும் ஆதனவரி எழுது வினைஞரினால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 59 – 66 | கைதொழில் வரி அறவிட வேண்டிய நிறுனங்கள் இனங்காணப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 153 | வருமான நிலுவைத் தொகை தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | ரூபா 1,638,496 கூட்டுத்தொகையான 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்துவரும் முன்னைய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 379,644 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 201,337 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 178,307 அதிகரிப்பைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிமீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ஆதனவரியும் வாடகையும், சேவைக்கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய மானியமும் வருமானமும் நிதிமூலத்தில் 17 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் நிதிமூலத்தில் 17 சதவீதம் முதல் 46 சதவீதம் வரை குறைவையும் காண்பித்திருந்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பிரயாணச் செலவினம், போக்குவரத்து தொடர்புகள், பயன்பாட்டு மற்றும் ஏனைய சேவைகள், மானிய நிதி பங்களிப்புப் பணம் மற்றும் நிதி உதவிகள் போன்ற செலவினங்களில் 7 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான அதிகரிப்பும், சம்பளம் மற்றும் படிகள் 75 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிப்பையும் காண்பித்தது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியன வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

(அ) சபையினால் 2014 ஆம் ஆண்டிற்கான பாதீடு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டமையினால் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குக் கிடைக்க வேண்டிய திரண்ட நிலுவை வருமானம் ரூபா 2,254,331 தொகையை அறவிடுவதற்கு எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 179,283 தொகையை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 264,700 தொகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 1,960,000 கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் பணத்திற்குரிய வட்டி மற்றும் தவணைப்பணம் 2006 இன் இரண்டாம் காலாண்டு முதல் செலுத்தப்படாமையினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடனின் அளவு ரூபா 1,326,044 தொகை மற்றும் நிலுவைக் கடன் வட்டி ரூபா 412,726 ஆக ரூபா 1,738,770 தொகை செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) காலாண்டு ரீதியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு முத்திரைக் கட்டணம் அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 130,024 தொகையொன்று கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 08 வரையிலும் செலுத்தாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 18,850 தொகை மற்றும் கொங்கிரீட் கல் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 345,000 தொகையொன்று 2013 ஆம் ஆண்டு முதல் இது வரை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் இதுவரை வழங்கப்பட்டுள்ள பதவியணியினர் கடன்களுக்குரிய எந்தவொரு கடிதமொன்றோ, கோவையொன்றோ உரிய கடமை கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்படாமையினால் கடன் தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபையின் 04 நூலகங்களில் காணாமல் போயிருந்த 2912 புத்தகங்களுக்குரியதாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் வாசகர்களுக்கு வெளியே எடுத்துச் செல்வதற்கு வழங்கப்பட்ட 341 புத்தகங்களை வாசகர்களிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்திட்டத்தை தாமதப்படுத்தல்

பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சின் மூலம் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,500,000 ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டின் செல்லுபடிக்காலம் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் முடிவடைந்ததால் வேலை ஆரம்பிப்பதற்கு முடியாமையினால் 2014 நவம்பர் 30 வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 30 வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்